**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.440/2024**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 15-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை -II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

பெயர் -திரு.ரஞ்சித்குமார் PW-3 தொழில் -

த/க பெயர் - வயது -

அலைபேசி - முகவரி -

ஆதார் எண் -

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் சாஸ்திரி நகரில் குடியிருக்கிறேன். தற்போது ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். 2017 ஆம் ஆண்டில் விபத்து நடந்த போது நான் பங்கில் கேசியராக வேலை செய்து கொண்டிருந்தேன். பங்கில் இருந்த போது சத்தம் கேட்டு போய் பார்த்தேன் அங்கு விபத்து ஏற்பட்டு இருந்தது. மறுநாள் நான் மீண்டும் வேலைக்கு வந்த போது அந்த சம்பவ இடத்தில் போலீசார் வந்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். விசாரணை செய்துவிட்டு என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கிக் கொண்டு சென்று

Dr.V.Sree Vidya Date: 2026.07.15 18:31:01 +0530

விட்டார்கள், சாட்சி கையெழுத்து போட்டேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**.

<u>**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**</u>:-

போலீசார் வந்து விசாரணை செய்தபோது சம்பவ இடத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட இரு வாகனங்களும் அங்கு தான் இருந்தது. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து ஏதும் செய்யவில்லை, காவல் நிலையத்தில் வைத்தும் கையெழுத்து செய்யவில்லை, பங்கில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரிதான்.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya Date: 2026.07.15 18:31:10 +0530

Chief Judicial Magistrate,
Erode.